# கரூர் நகராட்சி
# கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2020ம் ஆண்டு நவம்பர் 03ம் நாள் செவ்வாய்கிழமை மாலை 4.25மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற அவசரக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திருமதி.கே.எம்.சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எட்., அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

1)கரூர் நகராட்சிக்கு சிறப்பு சாலைகள் திட்டம் (SRP) திட்டம் 2020–2021ம் ஆண்டின்கீழ் ரூ.8.00கோடி மதிப்பீட்டில் கீழ்கண்ட பழுதடைந்துள்ள தார்சாலைகள் மற்றும் சிமெண்ட் சாலைகளை அபிவிருத்தி செய்யும் பணிகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு தொகையில் பணி மேற்கொள்வதற்கு உரிய நிர்வாக அனுமதி மற்றும் அரசு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து தரக் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களை கேட்டுக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண் | பணியின் விவரம் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | <u>சிப்பம்–1</u><br>வார்டு எண்.1, 2, 3, 4, 6, 7, 9 , 11 மற்றும் 14 ஆகிய பகுதிகளில் உள்ள கோதூர் ஏ.டி. காலனி, அரிக்காரம் பாளையம் குறுக்கு தெருக்கள், ராஜா மண்டபம் தெரு, வாய்க்கால் மேடு, வையாபுரி நகர் குறுக்கு தெருக்கள், பிள்ளையார் கோவில் குறுக்கு தெருக்கள் (கிழக்கு, மேற்கு), காமராஜ் தெருக்கள், புதுகுளத்துபாளையம் குறுக்கு தெருக்கள், கே.எஸ்.பி., தெரு, திருப்பூர் குமரன் தெரு, கண்ணதாசன் தெரு, சிவலிங்கா ஆசாரியார் தெரு, டி.எச்.ஓ. தெரு, காமாட்சியம்மன் கோவில் தெரு, பிள்ளையார் கோவில் தெரு, பழைய போஸ்ட் ஆபீஸ் தெரு, பழனியப்பா தெரு, என்.எஸ்.கே. நகர் ஆகிய பகுதிகளில் சிமெண்ட் சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 7.575 | 3.50<br>4.00<br>3.75<br>3.25<br>&<br>3.45 | 250.00 |
| 2 | <u>சிப்பம்–2</u><br>வார்டு எண்.15, 16, 18, 20, 23 மற்றும் 27 ஆகிய பகுதிகளில் உள்ள பாலாம்மாள்புரம் தெற்கு மற்றும் வடக்கு தெரு, முஸ்லீம் தெரு, சங்கரன்பிள்ளை ஸ்டோர் தெரு, கோட்டையண்ணன் கோவில் தெரு, ரத்தினம் சாலை குறுக்கு தெரு, நீலிமேடு குறுக்குத் தெருக்கள், காமாட்சியம்மன் கோவில் தெற்கு மற்றும் வடக்கு தெரு குறுக்கு தெருக்கள், திருப்பதி லே அவுட், பெரியசாமி நகர் குறுக்கு தெருக்கள், சாத்தாணி சந்து, வீரபத்ர சந்து, நஞ்சையா தெரு கிழக்கு மற்றும் மேற்கு தெரு, கருப்பாயி கோவில் இறக்கம் தெற்கு மற்றும் மேற்கு குறுக்கு தெருக்கள், திண்டுக்கல் ரோடு குறுக்கு தெருக்கள், கிட்டு சாகிப் தெரு, மக்கள் பாதை குறுக்கு தெரு ஆகிய பகுதிகளில் சிமெண்ட் சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 6.030 | 3.50<br>3.00<br>&<br>3.45 | 204.00 |
| 3 | <u>சிப்பம்–3</u><br>வார்டு எண்.24, 25, 26, 29 மற்றும் 30 ஆகிய பகுதிகளில் உள்ள வ.உ.சி., குறுக்கு தெரு, கெந்தபொடிக்கார தெரு, முல்லா சாகிப் தெரு, மாவடியான் கோவில் குறுக்கு தெரு, சேடர் சந்து, சாமியார் மைதானம், வஞ்சியம்மன் கோவில் குறுக்கு தெரு, வளையல்கார தெரு, குருசாமி தெரு, சின்ன வாய்க்கால் குறுக்கு தெருக்கள், திருமாநிலையூர் கிழக்கு தெருக்கள், காமராஜ் தெரு, தாந்தோணி குடித்தெரு, மற்றும் கொளந்தானூர் குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளில் சிமெண்ட் சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 5.175 | 3.50<br>&<br>3.25 | 146.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | <u>**சிப்பம்–4**</u><br>வார்டு எண்.36, 37, 38, 39 மற்றும் 47 ஆகிய பகுதிகளில் உள்ள ஜி.ஆர். நகர் மெயின் ரோடு, 3வது குறுக்கு தெரு முதல் 10வது குறுக்கு தெரு வரை, ராம் நகர் குறுக்கு சாலை, மகாலட்சுமி நகர் குறுக்கு தெருக்கள், காமராஜர் நகர், காவேரி நகர் குறுக்கு தெருக்கள், அசோக் நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளில் தார் சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 5.170 | 4.00 | 200.00 |
| | மொத்தம் | 23.950 கி.மீ., | | ரூ.800.00 லட்சம் |

அலுவலக குறிப்பு மன்றம் அனுமதி அளிக்கலாம் (இ1/6033/2020)

தீர்மான எண்.2546 அனுமதிக்கப்பட்டது.

2)கரூர் நகராட்சியில் குடிநீர் மற்றும் பொது நிதிப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும்வண்ணம் 27.08.2020ம் தேதியன்று மாலைமுரசு மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக் கட்டணம் ரூ.4725/–யை Thanjai Murasu Private Ltd., 37, Birds Road, Trichy அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்காணும் செலவினத் தொகை ரூ.4725/– பொதுநிதியிலிருந்து செலவு செய்த கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/1321/2020)

தீர்மான எண்.2547 அனுமதிக்கப்பட்டது.

3)தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் கரூர் நகராட்சியை திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத நகராட்சியாக அறிவிப்பதில் பொதுமக்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை அல்லது ஆலோசனை இருந்தால் 15நாட்களுக்குள் கரூர் நகராட்சி அலுவலகத்தில் எழுத்துமூலமாக தெரிவிக்கலாம் என்ற அறிவிப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர் அவர்களின் வழியாக மக்கள் குரல் தமிழ் நாளிதழில் 05.11.2020 அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக் கட்டணத் தொகை ரூ.6,048/–யை விளம்பர மேலாளர், மக்கள் குரல் தினசரி தமிழ் நாளிதழ் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி செலவினத் தொகை ரூ.6,048/–யை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்ம் (எச்1/8089/2014)

தீர்மான எண்.2548 அனுமதிக்கப்பட்டது.

4) கரூர் நகராட்சிக்கு சொந்தமான நெரூர் தலைமை நீரேற்றும் நிலையத்தில் இயங்கி வரும் Unit No.1 45HP Vertical Turbine Motorல் bearing கள் மாற்றி பொருத்தி மற்றும் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு.ரூ.1.50 லட்சம் மதிப்பீட்டில் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | A Sun Power Engineer, Karur | 0.22% குறைவு |
| 2) | Best Rewinding works, Karur | 1.80% அதிகம் |
| 3) | Nathan Engineering, Karur | 3.13% அதிகம் |

அலுவலகக் குறிப்பு
மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள A Sun

Power Engineer, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.1,48,052/—ஐ நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ3/4258/2020)

தீர்மான எண்.2549 பதிவு செய்யப்பட்டது.

5)கரூர் நகராட்சி பொதுசுகாதரப் பிரிவு வாகன எண். TN47AJ6203 வாகனத்திற்கு 2020—ம் ஆண்டிற்கான தகுதி சான்றிதழ் புதுப்பிக்க தேவையான மராமத்து பணிகள் செய்து முடிக்க 08.07.2020—ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று கோரப்பட்ட விலைப்புள்ளி கீழ்கண்டவாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Sri Jothi Murugan Motors Works<br>Sankar Nagar, Selam-636007 | 151700 |
| 2 | J.V.K. Auto Diesel Works,<br>J.V.K.Campus, Kalarampatt MainRoad, Salem – 636015. | 160850 |
| 3 | Lakshmi Auto Diesel Works<br>Work Shop Corner, Selam- 636401 | 139850 |

மேற்படி வரப்பெற்ற விலைப்பள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Lakshmi Auto Diesel Works,Salem, நிறுவனத்திற்கு நகராட்சி பொதுசுகாதார வாகன எண். TN47AJ6203 வாகனத்தின் பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று நகராட்சிகள் சட்டம் விதி1920 பிரிவு 15—ன் கீழ் 10.07.2020—ல் பணி உத்திரவு வழங்கியதையும் பட்டியல் தொகை ரூ.139850/— வழங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.
1)பொது சுகாதார பிரிவில் சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு வாகன எண். TN47AJ6203 வாகனத்திற்கு நகராட்சி சட்ட விதி 1920 பிரிவு 15—ன் கீழ் அனுமதி பெறப்பட்டு வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Lakshmi Auto Diesel Works,Salem நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதையும் பட்டியல் தொகை, ரூ.139850/— வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3)மேற்படி வாகனத்திற்கு அரசின் உச்சவரம்பு தொகையை விட கூடுதல் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/6229/2019

தீர்மான எண்.2550 பதிவு செய்யப்பட்டது.

6)கரூர் நகராட்சியில் Swachh Bharat Mission – Solid Waste Management 2020ன்கீழ் கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகள் மற்றும் அருகில் உள்ள ஐந்து ஊராட்சி பகுதிகளிலும் சேகரிக்கப்பட்டு மறுசுழற்சி செய்ய இயலாதநிலையில் உள்ள திடக்கழிவுகளை நவீன முறையில் அப்புறப்படுத்த 25MT கொள்ளளவு கொண்ட நவின எரியூட்டும் இயந்திரம் (Incineration Plant) அமைக்கும் பணியின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும்வண்ணம் 10.01.2020ம் தேதியன்று மாநில அளவில் Eyedea Brand Solutions மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக் கட்டணம் ரூ.1,39,598/—யை Eyedea Brand Solutions Chennai அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்காணும் செலவினத் தொகை ரூ.1,39,598/— பொதுநிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/1321/2020)

தீர்மான எண்.2551 அனுமதிக்கப்பட்டது.

7)கரூர் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் மண்டலம் 1 முதல் 5 வரையுள்ள பகுதிகளில் உள்ள வீடுகளில் நாள்தோறும் மக்கும் கழிவுகள் மற்றும் மக்காத கழிவுகள் வாங்கி சேகரிக்கும் பணி Battery Operated Vehicle (BOV) மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் 26 BOV வாகனங்கள் பழுதடைந்த நிலையிலுள்ளதால், பொதுசுகாதாரம் பணி பாதிக்கப்படுவதால்

பழுதடைந்த வாகனங்களை பராமரிப்பு செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.60லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்குண்டான செலவினத் தொகை ரூ.9.60இலட்சத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/6546/2020)

தீர்மான எண்.2552 அனுமதிக்கப்பட்டது.